உ

சிவமயம்

# சந்திரமௌலீசர்
# ஆலய வரலாறும் திருப்பதிகமும்



மட்டுவில் ஆ. நடராசா

உ

சிவமயம்

# சந்திரமௌலீசர்
# ஆலய வரலாறும் திருப்பதிகமும்

மன்மதனாலும்
யாழ்ப்பாண அரசை ஆண்ட
ஆரியச் சக்கரவர்த்திகள் அனைவராலும்
பூசிக்கப்பட்டவரும்
சாந்தநாயகி பாகரும்
மட்டுவிலிற் கோயில் கொண்டு
அருளாட்சி புரிபவருமான

**சந்திரமௌலீசர்**
**ஆலய வரலாறும் திருப்பதிகமும்**

ஆக்கியோன் : மட்டுவில் ஆ. நடராசா

முதற்பதிப்பு : 1989
சுக்கில ஆண்டு
அச்சுப்பதிப்பு : குகன் அச்சகம்
தெல்லிப்பழை

First Edition : 1989
Author : A. Nadarajah
"Vanchi"
Pathawathai
Ilavalai, Sri Lanka

உ

சிவமயம்

# கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள்

அளித்த

# அணிந்துரை

ஈழத்தின் தமிழியல் ஆய்வு முயற்சிகளில் அண்மைக் காலத்திலே தனிக்கவனத்தைப் பெற்றுவரும் துறைகளிலொன்று ஆலய வரலாற்றாய்வு ஆகும். கிராமங்கள் தோறும் அமைந்துள்ள ஆலயங்களின் தோற்றம், அவற்றில் உறையும் இறையின் அருள்நிலை, ஆலய அமைப்பு, வழிபாட்டுமுறைகள், இவற்றில் காலந்தோறும் நிகழ்ந்துவந்துள்ள பரிணாமங்கள், ஆலயச் சூழலில் வதியும் மக்கள் சமூகத்தின் பண்பாட்டு நிலை முதலியன தொடர்பான தகவல்களைத் தொகுத்து நோக்குவது ஆலய வரலாற்றாய்வின் பொதுநிலை. இத்தகு ஆய்வுகள் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. நிறுவனங்களின் ஆதரவிலும் தனிமனித ஆர்வத்திலும் ஆலய வரலாற்றாய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. அவற்றுட் பல நூல் வடிவு பெற்றுள்ளன. தனிமனித ஆர்வமுயற்சி என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆரம்பநிலை ஆய்வாக அமைவது மட்டுவில் ஆ. நடராசா அவர்களின் இந்நூல். மட்டுவிற் பதியிற் கோவில்கொண்டருள்புரியும் சாந்தநாயகி சமேத சந்திரமௌளீசர் ஆலயத்தின் வரலாறு தொடர்பான தகவல்களைத் திரட்டித் தொகுத்து நோக்குவதாக இந்நூல் அமைகின்றது.

மட்டுவில் சந்திரமௌலீசப் பெருமான் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, பண்டிதமணி இலக்கியகலாநிதி சி. கணபதிப்பிள்ளை என்போரால் பாடல் பெற்றவர். ம. க. வேற்பிள்ளை அவர்களின் ஈழமண்டலசதகத்தில் இப்பெருமான் கோவில் கொண்ட வரலாறு கூறப்பட்டுள்ளது. பண்டிதமணி அவர்கள் இப்பெருமானுக்குத் திருப்பொன்னூசல் பாடியுள்ளார். இவ்வறிஞர் பெருமக்களுடன் உறவுத்தொடர்பு கொண்டவரும் சைவத் தமிழ் ஆய்வில் ஆர்வமிக்குடையவருமான திரு. ஆ. நடராசா அவர்கள் சந்திரமௌலீசப் பெருமானது ஆலய வரலாற்றை இந்நூல் வடிவில் நமக்குத் தொகுத்துத் தந்துள்ளார்கள். ம. க. வேற்பிள்ளை அவர்களின் ஈழமண்டலசதகம் தரும் தகவல்களை ஆதாரமாகக்கொண்டே இந்த வரலாறு அமைக்கப்பட்டுள்ளது.

சந்திரமௌலீசப் பெருமான் பூர்வத்தில் திருக்கேதாரத் தலத்தில் மன்மதனாற் பூசிக்கப்பட்டவர் என்றும் சோழ இளவரசனொருவனால் தமிழகத்திற் கொணர்ந்து பிரதிட்டை செய்யப்பட்ட அவர் பின்னர் ஈழத்திற்கு எடுத்துவரப்பட்டார் என்றும் இந்நூல் கூறுகிறது. ஈழத்திலே முதலில் நல்லூரில் பிரதிட்டை செய்யப்பட்டுப் பின்னர் போர்த்துக்கீசர் படையெடுப்பால் மட்டுவிலுக்குக் கொண்டுசெல்லப்பட்டவர் எனவும் கூறப்படுகிறது. கேதாரத்து மன்மதலிங்கம் ஈழம் போந்த வரலாறு இந்திய நாட்டிற்கும் ஈழத்துக்குமுள்ள மிக நெருக்கமான பண்பாட்டுத் தொடர்பின் குறியீடாக அமைவது. நல்லூரில் கோவில் கொண்ட அத்தெய்வம் மட்டுவிலுக்கு ஏகிய செய்தி அந்நியராட்சியிலே ஈழத்தின் சைவத் தமிழ்ப் பாரம்பரியத்துக்கு நேர்ந்த இன்னல்களின் வரலாறாக அமைவது. மட்டுவிலில்

வன்னியசிங்க முதலியார் என்பவரால் 1786ஆம் ஆண்டில் சந்திரமௌலீசுவரர் சாந்தநாயகி சமேதராகப் பிரதிட்டை செய்யப்பட்டார் என்பதிலிருந்து அவ்வாலயத்தின் சமகால வரலாறு தொடங்குகின்றது. சந்திரமௌலீசப் பெருமானின் அருட்சிறப்பு, விழாப் பொலிவு என்பனவும் தலவிருட்சமாக வேர்க்கோட்பலா அமைந்த வரலாறும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இந்நூலிலே வரலாற்றுப் பகுதிக்கு இணைப்பாக இரு பிரபந்தங்கள் இடம்பெற்றுள்ளன. ஒன்று ம. க. வேற்பிள்ளை அவர்களது ஈழமண்டலசதகத்திலே சந்திரமௌலீசர் சாந்தநாயகி சமேதர் என்பதைக் கூறும் பாடற்பகுதி; மற்றது இந்நூலாசிரியர் சந்திரமௌலீசர்மீது பாடியுள்ள பதிகமாகும். காப்பு வெண்பாவுடன் பத்து (எண்சீர்) விருத்தப் பாக்களால் இப்பதிகம் அமைந்துள்ளது. இதிலே, நூலின் வரலாற்றுப் பகுதியிற் கூறப்பட்ட செய்திகள் சில தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன; சந்திரமௌலீசப் பெருமானின் அருளை வேட்கும் ஆத்மாவின் குரலும் ஒலிக்கின்றது; நாமார்ச்சனை முறையிலே இறைவனது திருநாமங்களைத் தொகுத்துக் கூறும் பண்பும் காணப்படுகின்றது.

இந்நூலின் அமைப்பை முழுவதாக நோக்கும்போது ஒரு தலபுராணத்தின் பண்பு கொண்ட வரலாற்று முயற்சியாக அமைவதை அவதானிக்க முடிகிறது. ஆசிரியர் ஒரு ஆய்வாளன் என்ற நிலையில் அன்றிப் பக்தன் நிலையிலேயே நின்று வரலாறு கூற முற்பட்டுள்ளமை தெரிகிறது. மட்டுவில் சந்திரமௌலீசுவரரது ஆலயத்தின் சிறப்பு உரிய வகையில் வெளிப்படுத்தப்படாமல் இருக்கின்றதே என்ற மனக்குறையும் அப்பெருமானது அருளாட்சி யாவருக்கும் கிட்ட

வேண்டும் என்ற ஆவலும் வரலாற்றுப்பகுதியின் இறுதியில் தொனிக்கின்றன. இவற்றின் தூண்டுதலே இந்நூலாக்கத்திற்கு அடிப்படை என்பது புலனாகின்றது. இந்நூலில் எடுத்துக் கூறப்பட்ட வரலாறுகள் யாழ்ப்பாணப் பிரதேசத் தமிழர் பண்பாட்டு வரலாற்றின் ஒரு கூறாக அமைவன. குறிப்பாக யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் அதன் வரலாற்றுச் செல்நெறி என்பன தொடர்பாக யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை என்பன தரும் குறிப்புக்களுடன் தொடர்புடையனவாகி இவை காணப்படுகின்றன. இந்நூல்களே ம. க. வேற்பிள்ளை அவர்களின் ஈழமண்டல சதகத்தில் அமையும் சந்திரமௌலீசர் தொடர்பான தகவல்களுக்கும் இவற்றை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்ட இவ்வாலய வரலாற்று நூலுக்கும் முக்கிய அடிப்படையாக அமைந்திருக்கவேண்டும் என்பது உய்த்துணரற்பாலது. மேற்படி யா. வைபவமாலை, கைலாயமாலை என்பன தரும் தகவல்களை எந்த அளவுக்கு வரலாற்றுச் சான்றுகளாகக் கொள்ளலாம் என்பதில் வரலாற்றாய்வாளரிடையே கருத்துவேறுபாடுகள் உள்ளன என்பது ஈண்டு சுட்டிக்காட்டப்படவேண்டிய தொன்றாகும். இவ்வகையில் நோக்கும்போது இந்த ஆலய வரலாற்று நூலில் இடம்பெறும் வரலாற்றுச் செய்திகள் உரிய வகையில் மீளாய்வு செய்யப்படவேண்டியன என்பதை ஈண்டு சுட்டவேண்டியது அவசியமாகிறது.

சிறிய வடிவில் அமைந்த இந்நூல் மேலும் விரிவானதும் ஆய்வு பூர்வமானதுமான வரலாற்று வளர்ச்சிக்கு வழிசமைக்க வேண்டும் என்பது எமது வேணவா. ஈழத்தமிழரின் பண்பாட்டு வரலாற்றை உரிய வகையில் வெளிக்கொணர்வதற்கு இத்தகு ஆரம்பநிலை வரலாற்று நூல்கள் பல உருவாகவேண்டியது அவசியமாகும். இவ்வகையில் இந்நூலாசிரியரது இம்முயற்சி ஈழத்தமிழ் உலகால் பாராட்டி வரவேற்கப்படுவதற்குரியதாகும்.

# சந்திரமௌலீசர் ஆலய வரலாறு

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி உதவியரசாங்க அதிபர் பிரிவில் சாவகச்சேரி நகருக்கு வடமேற்கில் ஏறக்குறைய ஐந்து கிலோமீற்றர் தொலைவில், கலுவம் என்னுங் குறிச்சியில் திருவளர்திடல் என்னுங் காணியில் அமைந்திருக்கிறது சந்திரமௌலீசர் ஆலயம். இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் சந்திரமௌலீசர். இறைவி பெயர் சாந்தநாயகி. இக் கோயிலின் தலவிருட்சம் வேர்க்கோட்பலா, தீர்த்தம் சந்திரபுஷ்கரணி, லிங்கம் தைவிகலிங்கம். இதன் வரலாறு மிகப் பழமையானது.

''தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலாட மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே''

என்னும் பாடலை ஆரம்பமாகக் கொண்டு சம்பந்தன் பதிகம் பாடிய தலம் திருக்கேதாரம். அது இமய மலையின் தென்பகுதியில் அமைந்திருக்கிறது. அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவனின் பெயர் கேதாரநாதன்; அம்பாளின் பெயர் கேதாரகௌரி.

முன்னொரு காலத்தில் திருக்கைலாயத்தில் ஒரு ஆசனத்தில் சிவபெருமானும் உமாதேவியாரும் நெருக்கமாக வீற்றிருந்தார்கள். அப்போது அங்கு சென்ற பிருங்கி முனிவர் பரமசிவனை மாத்திரம் வலம் வந்து வணங்க விரும்பி, வண்டு வடிவமெடுத்து அவ்வா

சனத்தைத் துளைத்து அதன் வழியாக நுழைந்து, உமாதேவியாருக்கும் சிவபெருமானுக்கும் இடையே புகுந்து, சிவனை மாத்திரம் வலம் வந்து வணங்கினர். அதைக் கண்ட பார்வதிதேவி பரமசிவனைப் பார்த்து, பிருங்கி முனிவர் தன்னை வலம் வராமைக்கு என்ன காரணமென வினவினர்.

சிவபெருமான், ''இம்மை மறுமை இன்பங்களைப் பெற விரும்புவோர் உன்னையும், முத்திபெற விரும்புவோர் என்னையும் வழிபடுவர்'' எனக் கூறினர். அதைக் கேட்ட உமாதேவியார் தான் இறைவனைப் பிரிந்து தனித்திருந்ததனலன்றே தமக்கு இழிவு நேர்ந்ததென நினைந்துவருந்தி, சிவபெருமானைப் பிரியாதிருக்கக் கருதி, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து, அவரது இடப்பாகம் தமக்கிடமாக வரம் பெற்ற தலம் திருக்கேதாரம்.

பனிக்காலத்தில் அத்தலம் பனிக்கட்டியால் மூடப் பட்டிருக்கும். அப்போது அங்கே மனிதர் வசிக்க முடியாது. அக்காலத்தில் — புரட்டாதி மாதத்துப் பூரணை தொடக்கம் பங்குனி மாசத்துப் பூரணை வரையுமுள்ள ஆறுமாத காலம் — இந்திரன் முதலிய இமையவர் கேதாரத்துக்கு வந்து திருக்கேதாரநாதரையும் அவருடைய அருட்சத்தியாகிய கௌரி தேவியையும் வழிபாடு செய்வர் என்பதும், பங்குனிப் பூரணை தொடக்கம் புரட்டாதிப் பூரணை வரையுள்ள ஆறுமாத காலமும் மனிதர் பூசனை புரிவர் என்பதும் ஐதிகம். இன்றும் அவ்வாலயம் அக்டோபர் மாதத்திற் பூட்டப்பட்டு மேமாதத்தில் ஆலயக் கதவை மூடிப் படிந்திருக்கும் பனிக்கட்டிகள் உடைக்கப்பட்ட பின்பே திறக்கப்படுகிறது. திருக்கதவு திறக்கப்பட்டிருக்குங்காலத்தில் கேதாரநாதருக்கும் கௌரிக்கும் அடியார்கள்பூசனை புரிகிறார்கள்.

ஆண்களையும் பெண்களையும் போகத்திலாழ்த்தி, அவர்களுக்கு இருவினையொப்பும் மலபரிபாகமும் வரச் செய்து வீடடைதற்குப் பக்குவப் படுத்துந் திருக்குறிப் போடு கேதாரகௌரி தனது திருக்கரங்களிலே, கரும்பு வில்லையும், பஞ்சபாணங்களையும் — தாமரை, சூதம், முல்லை, அசோகு, நீலோற்பலம் — ஏந்தியவளாகக் காட்சி தருகிறாள்.

அக்கரும்பு வில்லையும் பஞ்ச பாணங்களையும், தேவியிடமிருந்து பெற்று ஆண்களையும் பெண்களையும் போகத்திலாழ்த்தும் பணியைத் தான் செய்ய விரும்பிய மன்மதன் தேவியின் சந்நிதியிலே மற்றொரு கௌரிதேவி யையுஞ் சிவக்கொழுந்தையுந் தாபித்து, நெடுங்கா லம் வழிபட்டு, தேவி திருவருளினாலே கரும்பு வில்லை யும் மலர்க்கணைகளையும் பெற்றானென்பது கேதார தல வரலாறு.

சோழ அரசிளங் குமரனொருவன் ஸம்ஸ்கிருதங் கற்பதற்காக வடநாட்டிலுள்ள கௌட தேசத் துக்குச் சென்றான். அவன் அங்குக் கற்க வேண்டியவற் றைக் கற்றுத் தன்னாடு திரும்பமுன் கேதார நாதரை வழிபட விரும்பித் திருக்கேதாரத்துக்குச் சென்று ஆலய வழிபாடு செய்தான்.

அப்போது அவ்வாலயத்தில் வேறோரிடத்திலிருந்த, மன்மதனாற் பூசிக்கப்பட்ட சிவலிங்கம் அவனது கண் ணிற் பட்டது. அவன் அதன்மீது காதல் கொண்டான். அதைப் பிரிய விருப்பமின்றிச் சிலகாலம் அங்கே தங்கி னான். பின்பு சிவலிங்கப் பெருமானின் திருவருட் குறிப்பையும் அங்குள்ளோரின் அனுமதியையும் பெற்று அத் தெய்வீக லிங்கத்தை எடுத்துக் கொண்டு தன் னாடு திரும்பினான். தன் அரண்மனைக்கயலிற் சிவாலய மொன்றை அமைத்தான். அதில் அவ்விலிங்கத்தை ஆகம விதிப்படி பிரதிட்டை செய்து வழிபட்டான்.

அப்போது பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையில், சிறந்த வில்லாசிரியனொருவன் பாண்டிய அரசகுமாரருக்கு வில்வித்தை கற்பிப்பதாக அறிந்து, தனது தந்தையின் அனுமதியோடு அங்கு சென்று, பாண்டியனுடைய அன்பையும் ஆதரவையும் பெற்று வில்வித்தை கற்று வந்தான்.

அவ்வேளையில் யாழ்ப்பாண அரச பரம்பரை அடியற்றுப்போக நாடு அரசனின்றிச் சீரழிந்தது. அப்போது சோழநாட்டிலுள்ள பொன்பற்றியூரிலிருந்து யாழ்ப்பாணம் வந்து, சேதிராயன் மரபிற் பிறந்த மங்கையொருத்தியை மணம்புரிந்து திருநெல்வேலியில் வாழ்ந்த மழவராயர் என்பவர் தம் நாட்டு நிலைமையைச் சிந்தித்தார். அந்நிலையில் வேற்றினத்தானொருவன் தமிழரசைக் கைப்பற்றி ஆளும் அவல நிலை உருவாகுமோ என எண்ணினர்; தமிழகஞ் சென்றார்; யாழ்ப்பாணத் தமிழரசை ஆளக்கூடிய அரசனொருவனைத் தேடினர். மதுரையில் வில்வித்தை கற்றுக்கொண்டிருந்த சோழ அரச குமாரனையே யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசனுக்க வேண்டுமென விரும்பினர். சோழ மன்னனைச் சந்தித்து அவனுக்கு நிலைமையை விளக்கினர். மன்னன் தன்மகனை யாழ்ப்பாணம் அனுப்புவதற்குச் சம்மதித்தான்.

பின்பு, மழவராயர் மதுரைக்குச் சென்றார். மாறவர்மன் குலசேகர பாண்டியனைச் சந்தித்துத் தான் அவனிடஞ்சென்ற காரணத்தைக் கூறினர். பாண்டியன் வில்வித்தையிற் சிறந்த சோழ அரச குமாரனை அழைத்தான்; அவனுக்கு மழவராயர் அங்கு வந்த காரணத்தை விளக்கினன். அரச குமாரன் யாழ்ப்பாணஞ் செல்ல இணங்கினன்.

பாண்டியன், சுபவேளையில் அரச குமாரனுக்கும் அரச குமாரிக்கும் பரிசனங்களையும் பணத்தையுஞ் சிறு சேனையையுங் கொடுத்து, மழவராயரோடு, வாழ்த்தி வழியனுப்பினான்.

அரசகுமாரன் தான் பெற்ற வரிசைகளோடும் மழவராயரோடுந் திருவாரூருக்குச் சென்றான். அங்கு தன் தந்தையைக் கண்டு அவருடைய ஆசியைப் பெற்றான். அவர் கொடுத்த வரிசைகளோடு கோடிக்கரை வழியாக யாழ்ப்பாணத்துக்கு வந்தான். நல்லூரில் ஒரு அரண்மனையை அமைப்பித்தான். வேளாண் பிரபுவாகிய மழவராயர் எடுத்துக் கொடுக்க, அரச குமாரனுடன் வந்த கங்காதரக்குருக்கள் அவ்வரச குமாரனுக்கு மணிமகுடம் புனைந்து 'சிங்கையாரியச் சக்கரவர்த்தி' என்னும் பட்டத்தைச் சூட்டினார்.

அரசனானை பின்பும் சிவபூசா துரந்தரனாகிய அவனால், அவன் கேதாரத்திலிருந்து கொண்டுவந்த சிவக் கொழுந்தைப் பிரிந்திருக்க முடியவில்லை. தன் அரண்மனை வளாகத்தில் ஒரு சிவாலயத்தைக் கட்டுவித்தான். இச் சிவாலயத்தின் கீழைக் கோபுரவாயிற் பிள்ளையார் கோயிலே இப்போது கைலாயநாத பிள்ளையார் கோயிலென அழைக்கப்படுகிறது.

சோழநாட்டில் தன் அரண்மனைக்கண்மையிலுள்ள கோயிலிற் பிரதிட்டை செய்த மன்மத மகாலிங்கத்தை அனுப்பும்படி, தன் தந்தைக்குத் திருமுகமனுப்பி, அதை வருவித்துத் தான் அமைத்த ஆலயத்தில், சுப முகூர்த்தத்தில் கைலாயநாதர் என்னுந் திருநாமத்தோடு சிவலிங்கப் பெருமானையும் கைலாயநாயகி என்னுந் திருநாமத்தோடு அம்பாளையும் சைவாகம விதிப்படி பிரதிட்டை செய்வித்து வழிபட்டு வந்தான்.

1591ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதிப்பகுதியில் பறங்கியர் யாழ்ப்பாண அரசை அடிபணியச் செய்தனர். அதனுல் யாழ்ப்பாண அரசு பறங்கியருக்குத் திறை செலுத்தவேண்டிய அவலநிலைக்கு ஆளானது. இருந்தபோதிலும் யாழ்ப்பாண அரசர்கள் ஒழுங்காகத் திறை செலுத்தவில்லை. இடையிடையே பறங்கியருக் கெதிரான போராட்டத்தை நடத்தினுர்கள். அவர்கள் நடத்திய எந்தப் போராட்டமும் வெற்றியளிக்கவில்லை.

இந்நிலையில் கொழும்பிலிருந்த கொன்ஸ்தந்தீனு தெசா என்னும் போத்துக்கீசத் தேசாதிபதி, பிலிப்தெ ஒலிவெரு என்னுந் தளபதியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினுன். யாழ்ப்பாண அரசனைக் கைது செய்து 1621-02-02ல் நல்லூரைத் தனது வதிவிடமாக்கிய அத்தளபதி, இங்கிருந்த சைவாலயங்களை அழிக்கும்படி தனது படைக்குக் கட்டளையிட்டான்.

தமது ஆலயங்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற் காகச் சைவாபிமானிகள் தம்மாலாகும் அனைத்தையுஞ் செய்தும், அவர்களது முயற்சி பயனற்றுப் போனது. போத்துக்கீசத் தளபதிக்கு அவன் கேட்டவற்றையெல் லாங் கொடுத்தும் ஆலயங்களைக் காப்பாற்றுவதற்கு யாழ்ப்பாண மக்கள் ஆயத்தமாக விருந்தபோதிலும் அவன் எதனையும் ஏற்க மறுத்தான்; ஆலயங்களை அழிக்கத் தொடங்கினுன்.

அதனுல் ஆலயங்களைக் காப்பாற்ற முடியாவிட்டா லும், தாம் வணங்குந் தெய்வத் திருவுருவங்களை யாவது காப்பாற்றுவதெனச் சைவாபிமானிகள் முடிவு செய்தனர்.

பின்னுளில் புவனேகுவாகு என்னும் பட்டப் பெய ருடைய நீலகண்ட ஐயராற் கட்டப்பட்ட நல்லூர்க்

கந்தசுவாமி கோயில் விக்கிரகங்களை அக்கோயிற் குருக்கள்மார் பூதராயர் கோயிலுக்குச் சமீபத்திலுள்ள குளத்திற் புதைத்துவிட்டு நீர்வேலிக்கு ஓடினர்.

கைலாயநாதர் ஆலயம் அழிக்கப்படுவதற்கு இரண்டொரு தினங்களுக்குமுன், நடக்கவிருப்பதையறிந்த கோயிற் குருக்கள், மனம் வருந்திக் கண்ணீர் சிந்தியவராய் அன்றிராத்திரிக் கோயிற் பூசையை முடித்துவிட்டு, கைலாயநாதப் பெருமானையும் கைலாயநாயகியையும் ஆலயத்திலிருந்து எடுத்துத் தன்னூராகிய மட்டுவிலுக்குக் கொண்டுசெல்வதெனத் தீர்மானித்தார்.

தென்னங்குற்றியொன்றைத் தறித்துச் சிற்றுருளைகளை ஆக்கினர். அவ்வுருளைகளின் மேல் பனம் மட்டைகளாற் படல் கட்டி வைத்து வண்டிலொன்றை ஆக்கினர். அர்த்தயாமவேளையிலே ஆரும் அறியாமல், கைலாயநாதசுவாமியாகிய சிவலிங்கப் பெருமானையும் கைலாயநாயகியையும் அந்த வண்டியில் வைத்து அதை இழுத்துச் செல்ல முயன்றார். பாரமிகுதியால், அவரால் வண்டியை இழுக்கமுடியவில்லை. மீண்டுங் கண்ணீர் சிந்தியபடி, தேவியின் திருவுருவை வண்டியிலிருந்து இறக்கி, அதைக் கோயிற்றீர்த்தக் கிணற்றுக்குள் இறக்கிவிட்டார்.

சிவலிங்கப் பெருமானை மாத்திரம் ஏறக்குறைய 16 கிலோமீற்றர் தூரத்துக்கு வண்டியோடிழுத்துச் சென்று பொழுது புலர்வதன் முன் தன்னூரையடைந்தார்.

அங்கு, செங்கற் றிருப்பணி செய்யப்பட்டு நெடுங்காலமாகப் புதுக்குவாரின்றிக் கிலமடைந்திருந்ததொரு சிவாலயத்தின் திருமஞ்சனக் கிணற்றுக்குள் சிவலிங்கப் பெருமானை இறக்கிவிட்டு, ஆற்றெணாத் துயரோடு தன் வீட்டுக்குச் சென்றார்.

''நான் முப்போதுந் திருமேனி தீண்டிப் பூசை செய்த இறைவனுக்கும் இறைவிக்கும் இனி எப்போது பூசை செய்வேன்?'' என எண்ணி யெண்ணி ஏங்கினர். அவரது உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

நடந்த சம்பவம் யாருக்குந் தெரியாது. மன்மத மகாலிங்கம் திருமஞ்சனக் கிணற்றில் மறைந்தது; ஆரியச் சக்கரவர்த்திகள் அனைவரும் வழிபட்ட தெய்வத் திருவுரு—கைலாயநாதப் பெருமானாகிய சிவக்கொழுந்து காட்சிக்கரிதானது. பறங்கியர் ஆட்சி ஒழிந்தது. ஏறக் குறைய 120 ஆண்டு காலங்கழிந்தது.

வன்னி வளநாட்டை வன்னியர் ஆண்ட காலமது. வன்னியரின் ஆட்சியில் அதிகாரியாகப் பணிபுரிந்த காரணத்தால் 'வன்னியசிங்க முதலியார்' என அழைக் கப்பட்ட ஒரு சிவபக்தர் மட்டுவிற் சிவன் கோயி லுக்கு அண்மையில் வசித்து வந்தார். ஒரு நாள் அவ ருடைய கனவிலே கைலாயநாதப் பெருமான் காட்சி யளித்தார். கைலாயநாதர் ஆலயத்திலிருந்து தான் மட்டுவிலுக்கு வந்த வரலாற்றையும், தனது இருப் பிடத்தையும் முதலியாருக்குத் தெரிவித்தார். சிதைந்த சிவாலயம் இருக்குமிடத்தில் வெள்ளைக் கல்லினல் ஒரு ஆலயத்தை அமைத்துத் தன்னை அதிற் பிரதிட்டை செய்யும்படி திருவாய் மலர்ந்தருளினர்.

முதலியார் கண்விழித்தார்; அவருடைய மெய் சிலிர்த்தது; கண்ணீர் சொரிந்தது; திருவருளை வியந் தார், எப்போது பொழுது புலருமென எதிர்பார்த்தி ருந்தார்.

பொழுது புலர்ந்தது. முதலியார் அயலில் வசிப்ப வர்களுக்குத் தான் கண்ட கனவைக் கூறினர். அவர் களின் உதவியோடு, தூர்ந்திருந்த திருமஞ்சனக்

கிணற்றை மிகவும் அவதானமாக அகழ்ந்தார். அங்கே சிவலிங்கத் திருவுருவைக் கண்டார். அவரது கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. முதலியார் சிவக் கொழுந்தைக் கட்டியணைத்துக்கொண்டு கரையேறினர். அங்கிருந்த சிற்ருலயமொன்றைத் திருத்தி, கழுவாய் புரிந்து, சிவலிங்கப் பெருமானைப் பிரதிட்டை செய்து நித்திய பூசை முதலியவற்றை நடப்பித்து வந்தார். திருவருளாணையின்படி இறைவனுக்குச் சந்திரமௌலீசர் எனவும் இறைவிக்குச் சாந்தநாயகி எனவும் திருநாமஞ் சூட்டப்பட்டது.

இவ்வரலாற்றை,

''இந்திரன் முதலும்பர் வந்தாறு திங்களினு
மிம்பர்மூ விருதிங்களு
மிறைவர்நித் தியபூசை தவரு தியற்றிட
விலங்குகே தாரமதனிற்
சுந்தரந் தந்துமதன் முந்துதா பித்திட்ட
தொன் மகா லிங்கமுதலே
தூயயாழ்ப் பாணநல் லூர்ச்சிங்கை யாரியத்
தோன்றல்பின் னுட்கொணர்ந்தோர்
மந்திரந் தந்துபிர திட்டைசெய நல்லூரின்
மன்னுகயி லாயநாதா
மற்றதன் பின்னல்லை விட்டொர்மா முதலிதர
வந்திந்த் நகர் மருவினுய்
சந்ததந் தமியனிடர் சிந்திடத் திருவருள்செய்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே''

என்னும் ஈழமண்டல சதகச் செய்யுள் (02) கூறுகிறது.

இறைவன் அருளிச் செய்தபடி சிவனுக்குக் கற்றள் யமைப்பதற்கு முதலியார் முயற்சி செய்தார். தம்மூ

லுஞ் சுற்றுக் கிராமங்களிலும் வேறிடங்களிலும் நிதி சேர்த்தார். சிவாகம விதிப்படி வெண்கற்களாற் சிவாலயம் அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் 1786 ஆம் ஆண்டு சந்திரமௌளீசப் பெருமானையும் சாந்தநாயகி அம்பாளையும் பிரதிட்டை செய்தார்கள்.

ஆலயம் அமைந்திருக்குங் காணியின் பெயர் திருவளர்திடல் என்பதை,

"..... தருவளர் தருந்தனித் திருவளர் திடற் கண்வாழ்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே"

என்னும் ஈழமண்டல சதகச் செய்யுளாலும் (85) அறியலாம்.

வெண்கற்களாற் கட்டப்பட்ட இக்கோயில் இருக்குமிடத்தில் முன்பு செங்கற்றிருப்பணிக் கோயிலொன்று இருந்ததென்னும் கன்ன பரம்பரைக் கதை உண்மையான தென்பதை 'திருவளர் திடல்' என்னும் ஆலயக் காணியின் பெயர் உணர்த்துகின்றது.

அந்நாளில், திருவெம்பாவைக் காலத்தில் ஆலயத்தில் மகோற்சவம் நடைபெற்றது. ஒருமுறை மகோற்சவத்தின் இறுதி நாளான திருவாதிரைத் திருநாளில் சுவாமிக்குப் பஞ்சாமிர்தஞ் செய்வதற்காகப் பலாப்பழம் ஒன்றைப் பெறுவதற்கு அன்றைய உபயகாரர் தம்மால் இயலு

மானவரை முயன்றும் அது கிடைக்கவில்லை. அதனால் அவர் மிகுந்த மனவருத்தத்தோடு ஆலயத்துக்கு வந்தார். அங்கே பலாப்பழ வாசனை வீசியது. அதனால் ஆச்சரியமடைந்த அவர், அவ்வாசனை எங்கிருந்து எப்படி வருகிறதென்பதை அறிவதற்காகச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

ஆலயத்தில் நின்ற பலாமரத்தின் அடியில் ஓரிடத்தில் மண் பிளந்திருந்தது. உபயகாரர் அப்பிளவைக் கூர்ந்து நோக்கினார். அங்கே பழுத்த பலாப்பழம் ஒன்றைக் கண்டார். பஞ்சாமிர்தஞ் செய்வதற்குப் பலாப்பழங் கிடைக்காமை காரணமாக அவருக்கு வந்த மனவருத்தம் நீங்கியது. அவரடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அனைவருந் திருவருளை வியந்தனர். பலாப்பழம் பஞ்சாமிர்தஞ் செய்வதற்குப் பயன்பட்டது. அப்பழத்தைப் பழுத்த வேர்க்கோட் பலாவே சந்திர மௌலீசர் ஆலயத் தல விருட்சமாகும்.

பலாமரம் வேரிற் பழுக்க வருளிய சந்திர மௌலீசப் பெருமானுடைய திருவருளை வியந்து,

"......சாரிற் பலாதனது வேரிற் பழுக்கவருள்
சாந்தநா யகி சமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே" எனப் பாடுகிறார் (96) ஈழ மண்டல சதக ஆசிரியர்.

'சாரிற்பலா தனது வேரிற் பழுக்கவருள்' என்னுஞ் சொற்றொடருக்கு, "முதலாவரணத்திலே ஈசானிய திக்கிலே நிற்கின்ற தலவிருக்ஷமாகிய வேர் வருக்கையானது தன் காரணக் குறியின்படி ஓர் திருவாதிரை நட்சத்திர தினத்திலே பூமியின் கீழுள்ள தனது வேரிலே காய்த்துப் பழுக்கும்படி திருவருள் பாலித்த" என

எழுதப்பட்ட உரை, தலவிருட்சம் பற்றி மேலும் விளக்கந் தந்திருக்கிறது. இப்பலாவின் ஒரு பகுதியை இன்றும் ஆலயத்திற் காணலாம்.

'சாரிற்பலா' என்பதற்கு உரையெழுதும்போது உபயோகிக்கப்பட்ட 'முதலாவரணத்திலே' என்னுஞ் சொல், அந்நாளிலே ஆலயத்துக்கு இரண்டாவது வீதி அமைக்கப்பட்டிருந்ததென்பதையும், இரண்டாவது வீதியும் இருந்ததெனவே அந்நாளில் ஆலய விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன என்பதையும் எமக்கு ஞாபகப் படுத்துகிறது.

புண்ணியத் தலங்களுக்கு அவ்வவ் விடங்களில் கோயில் கொண்டெழுந்தருளி யிருந்தருள் புரியும் தெய்வத்தின் பெயரைத் தொடர்புபடுத்திப் பெயரிடுவது வழக்கம். அவ்வழக்கப்படி மட்டுவிலின் பெயர், சந்திரமௌலீசர் + புரம் = சந்திரமௌலீசபுரம் என வழங்க வேண்டும். ஆனால் அச்சூழலோ மட்டுவிலோ என்றுவது அப்பெயரால் அழைக்கப்பட்டதில்லை. 'சந்திர மௌலீசபுரம்' என்னுஞ் சொல்லின் சுருக்கமாகிய 'சந்திரபுரம்' என்னும் பெயரால் அழைக்கப்படுவதுண்டு. ஈழமண்டல சதகமும் ''சந்த்ரபுர தலவாசனே'' என்றே சந்திரமௌலீசப் பெருமானை விளிக்கிறது.

இதற்குமேல் கால வரன்முறையின் படி இவ்வாலய வரலாற்றை எழுதினுல், அது பலருக்கு வருத்தந்தருந் துன்பியல் நிகழ்ச்சியாக அமைந்துவிடும். அதனுல், ''புனிதம் மிக்க வைதிக சிவத்தலங்கள், வழிபடும் பக்குவர்கள் அருகிய காலத்தில் மறைவதும் பக்குவர் சிலரின் தவவிசேடத்தினுல் ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும் இயற்கை என்று கூறக் கேட்டதுண்டு'' எனத் 'திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்' என்னுங் கட்டுரையில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. க.

அவர்கள் கூறுவதை நினைவுகூருவோம். அவர் குறிப்பிட்ட கூற்றில் 'ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும்' என்பதைத் தொடர்ந்து 'இருந்தும் இல்லாதது போல இருப்பதும்' என்னுஞ் சொற்றொடரைச் சேர்த்துக் கொள்ளுவதும் பொருத்தமானதாக இருக்கலாம்.

இறைவனை வணங்க விரும்புவோர் முதலில் அதற்குரிய பக்குவத்தை அடைய வேண்டும்; இறைவனருளைப் பெறவேண்டும். ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்பது திருவாசகம். ''மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்'' என்பது காரைக்காலம்மையாரின் வேண்டுதல். எமது வேண்டுதலும் 'உன்னை என்றும் மறவாமை வேண்டும்' என அமையுமானால் சந்திரமௌலீசர் ஆலயஞ் சிறக்கும்; எமக்கு அவனருள் கிடைக்கும்.

உ
சிவமயம்

மட்டுவில் ஆ. நடராசா அவர்கள் பாடிய

# சந்திரமௌலீசர் திருப்பதிகம்

### காப்பு

பாரதத்தை உன்கோட்டாற் பொற்கோட்டி
னிற்பொறித்த
வாரணமே நானெழுத நீயருள்க — மட்டுவிலூர்
சந்திரமௌ லீசனருள் அம்மை யுமைபங்கன்
வந்தருள வோர்பதிகந் தான்.

### பதிகம்

விண்ணவரும் மண்ணவரும் மண்ணுலகில் எண்ணுவன
வேண்டிவழி பாடுபுரி கேதார மூதூர்
நண்ணினவர்க் காதார மாயருளு கேதார
நாதனடி கும்பிட்ட சோழனிள மைந்தன்
மண்ணிதனில் மன்மதன்முன் வணங்குசிவ லிங்கமுனே
மனநினைந்துன் அன்பெழுத லாற்பிரித லாற்முன்
கொண்டுனைத்தன் நாடடைய வன்றருளு மெங்களிறை
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 1

மன்னுயிரும் மாயைத ருமுலகனைத் துமுடையாய்
உன்னுருவைத் தான்பெற்ற தவமுடைய செம்மல்
தன்னுட டைந்தங்கு னக்கால யமமைத்து
தப்பாதுன் பூசனைபு ரிந்ததவத் தாலோ
தன்னாட்டு அரசுரிமை யாழ்ப்பாணந் தான்கொடுக்கத்
தானரசாய் முடிசூடி நல்லூரில் வந்து
உன்னால யமமைக்க வந்தாய்கை லாயநாதா
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 2

உன்னுமத் தைந்தெழுத்துந் திருநீறுந் தவநெறியும்
ஊரெங்கும் விளக்கமுற்ற வந்நாளின் பின்னுள்
முன்னுளில் இந்நாட்டில் நிகழாத அவநெறியை
முன்வைத்து ஊனவணங்குங் கோயிலேயில் லாமற்
சின்னுபின் னப்படுத்தப் பாதகராம் பறங்கியர்கள்
சிந்திக்க வதையறிந்து பரிதபித்த வையர்
உன்னைம றைத்துவைக்க மட்டுவிலில் மறைந்தவனே
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 3

உன்னுருவை மறைத்தையர் ஊன்நீத்து ஊனயடைய
ஊனெடுத்த பயனறியா துலகுதடு மாற
முன்செய்நல் வினைவிளைந்து பயனளிக்க விங்குளவோர்
மாமுதலி தன்கனவி லுனைக்காட்டி யந்நாள்
உன்மறைவி டங்காட்டிப் பின்னுளுன் திருநாமம்
உரைக்குமாறு சந்திரமௌ லீசரென வுணர்த்த
அன்பால வனமைத்த வாலயத்தில் அமர்ந்தவனே
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 4

உன்கோயில் முன்னுள்ள செந்நெல்வி ளைசெய்கள்
உழைப்பார்தஞ் செயற்கேற்ற விளைவளிக்குஞ் செயலால்
உன்னுலே யுய்திபெறும் எண்பத்து நான்கிலக்க
உன்னரிய யோனிபேத உயிர்கட்கு மளவால்
முன்னுளிற் செய்வினையை யூட்டுமுன்றன் செயல்காட்ட
முன்புள்ள சந்திரபுஷ் கரணியெனுந் தீர்த்தம்
தன்னீரால் நோய்நீக்கி உன்னியல்பாம் அருள்காட்டும்
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 5

விண்ணொடுமண் ணீர்நெருப்பு வளியுடனே யாருயிரும்
வான்நிலவு மிருசுடரும் இடமாக வருள்செய்
எண்குணத்தா யட்டமூர்த்தி எங்குணமாம் முக்குணத்தில்
எக்குணமு மில்லாநிர்க் குணனேநின் னடியே
எண்ணியெண்ணி என்புருகு மவரன்பின் வழிபுகுந்து
இதயங்கோ யில்கொள்ளை யநீசெய்யைந் தொழிலும்
எண்ணினுன்னு யிர்க்கருளு மருட்செயலே யாகுமன்றே
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 6

தாழ்த்தத்த லைதந்து னைநினைய வெனநெஞ்சந்
திருக்கோயில் கூட்டிக்க ழுவிக்கோல மிட்டுச்
சூழ்த்தவண்ண மலர்மாலை புனையக்க ரமிரண்டுஞ்
சீரார்தி ருவடிவுகாண் பதற்குக்கண் ணிணையும்
வாழ்த்தவென வாயும்பு கழ்கேட்க விருசெவியும்
வீதிவலம் வரக்காலும் ஆரணவா கமமும்
வாழ்க்கைவ ழிகாட்டவீட்டு நெறியருள வருள்சிவனே
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 7

கல்யாண சுந்தரரு மாமகேச ரேகபாதர்
கங்காளர் சங்கரன்சம் புசந்திரசே கரரே
சலந்தராரி ஆலமர்க டவுளேசு டலையாடி
சக்கரப்பி ரதரைங்க ரன்தந்தை நித்தன்
காலாரி திரிபுராரி பசுபதியி டபாரூடர்
காமாரி யர்த்தநாரீ சுரரேஹ ரியர்த்தர்
நீலகண்டன் சபாபதிசோ மாஸ்கந்த னும்நீயே
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 8

கங்கைதங் குசடைய தனிற்பொங்க ரவுசூடி
கலங்கிவரு மதியதனை எடுத்தயலில் வைத்து
அங்கையி னில்மழுவு டனேமான்ம றியுமேந்தி
அபயவர தங்களுடன் கடலிலெழு நஞ்சை
தங்கவது மிடறடக்கு மங்கையு மைபங்க
துங்கமத வேழமதைப் பங்கமுற வுரித்தாய்
எங்கள்கு றைதீர்த்த ருளுகைலை யுறையிறைவா
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 9

திருமாலும் பிரமாவும் மண்பிளந்தும் வான்பறந்துந்
திருவடியுஞ் சடைமுடியு மறிவரிய பெரியாய்
கருப்புவில்லால் மலர்க்கணையை எடுத்தெய்த காமன்தன்
கருமேனி யழியவிழித் தாய்காலற் காய்ந்தாய்
எருதூர்ந்தாய் எண்ணார்பு ரமூன்றுமெரி யச்சிரித்தாய்
அருவாகி யுருவாய ருவுருவாய ருள்வாய்
கருதுமுன்ன டியாரடிய டையவருள் கலுவத்தாய்
சாந்தநாய கிசமேத சந்திரமௌ லீசா. 10

# ஈழமண்டலசதகம்

## சந்திரமௌலீசர் சாந்தநாயகி சமேதரென்பது

நீரேறு செஞ்சடை நிருத்தரயல் சாட்சியாய்
நின்றருள் சபாநாயகி
நிகமாக மங்கடுதி செய்நிமல நாயகிமெய்
நித்யமங் கலநாயகி
காரேறு நெஞ்சினேற் கன்னியாய் முன்னின்று
கருணைபுரி திருநாயகி
கந்தனொடு கடகளிறை முந்துதந் தமரரிடர்
காத்தகட வுளர்நாயகி
பாரேறு சமயங்க ளோராறு மன்பினொடு
பாதுகாத் திடுநாயகி
பரமனரு ளிருநாழி நெற்கொடெண் ணான்கறம்
பாலித்த பெருநாயகி
தாரேறு சுரிகுழற் சர்வநா யகிகலுவ
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே 1

நிருத்தர் — (பஞ்சகிருத்திய) நடனஞ்செய்பவர்

காரேறுநெஞ்சு — அறியாமைபொருந்திய மனம்

கடம் — மதம்

விலாசன் — விளையாட்டையுடையவன்

விலாசம் — விளையாட்டு

பரமன் — (இங்கு) காஞ்சிபுரத்திலே எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரநாதர்

சமேதம் — கூடுதல்

## பதி

நித்தனிர் வியாபகனெர் நிட்களங் சுன்சோதி
நிகமாக மங்கடந்தோ
னித்தியா னந்தன் பரப்பிரம மேவிபு
நிராமயான் மாவநாதி
முத்தனைந் தொழில்களு மியற்று இயற்றியிடு
முழுமுத லநாதிபோதன்
முத்திமா முதலகில காரணன் பரமேட்டி
முதறுணை நிமித்தமில்லான்
சுத்தன்வி சுத்ததே கத்தனந் தரியாமி
சொல்சிதா காசரூபி
சுவதந்தி ரன்மகா தேவனே யருளாழி
தொல்பரம சிவனேபதி
சத்தியஞ் சத்யமுக் காலுமிது சத்தியஞ்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே 2

நிர்வியாபகர் — எங்கும் நிறைந்தவர்
நிர் — (இங்கு அதிகம் என்னும் பொருள் தருகிறது)
நிகம ஆகமம் — வேதாகமம்
விபு — ஐசுவரிய சம்பந்தர்
நிராமயான்மா — பிறப்பிறப்பற்ற பரமான்மா
அநாதிபோதன் — இயற்கை அறிவை உடையவன்
பரமேட்டி — மேலான யாகத்துக்குரியவர்
அந்தர்யாமி — எவற்றுக்கும் உள்ளே இருப்பவர்
வேதாகமங்கடந்தோன் — வேதாகமங்களைக் கடந்தவர்
வேத ஆகமங்கள் தந்தோன் எனவும் பொருள் கூறலாம்.

## மகேசுர மூர்த்தங்கள் இருபத்தைந்து

கலைமதி தலைக்கொளுங் கடவுண் மா தங்காரி
காமாரி திரிபுராரி
கல்யாண சுந்தரனு மாமகே சன்காள
கண்டன் சலந்தராரி
அலைவிப்பிச் சாடனன் கயமுகா னுக்கிரக
னர்த்தநா ரீசுரனரி
யர்த்தனிட பாரூட னேசபா பதிவீர
பத்திரனெ டந்தகாரி
சலமறு கிராதனே சண்டேச னுக்கருள்செய்
சாமிகங் காளனேக
தாளன் சுகாசீன னுமைகந்த ரொடுகூடி
சக்கரப் பிரதனையைந்
தலைவர்தாந் தக்கிணு மூர்த்திலிங் கோற்பவன்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. 3

மாதங்காரி — யானையைத் தோலுரித்தவர்
காமாரி — மன்மதனைத் தகித்தவர்
சலந்தராரி — சலந்தரனைக் கொன்றவர்
அரிஅர்த்தன் — விட்டுணுவைப் பாதித்திருமேனியாக வுடைய சங்கரநாராயணர்
கிராதன் — வேடன்
கங்காளன் — எலும்பைத்தரித்தவர்
ஏகதாளன் — ஒரே திருப்பாதத்தை உடையவர்
ஐயைந்தலைவர் — இருபத்தைந்து மகேசுர மூர்த்தங்கள்
சுகாசீனர் — நன்முக இருப்பவர்
ஆசீனம் — இருத்தல்

## முடிப்புரை விண்ணப்பம்

நீயே யுயிர்க்குளுயிர் நீயே யொளிக்குளொளி
நீயே யெதற்குளெதுவும்
நினையின்றி யாரென்று நினையவும் வல்லனோ
நீசனேன் பிழைபொறுப்பாய்
நீயே நிராலம்ப நித்தமுத் தச்சித்து
நீகொலாந் திரிபுடிநிதி
நீயே கரந்துமுட னாகியும் வேறாயு
நின்றெனை நடாத்து நிகிலம்
நீயே செயுங்குற்ற முங்குணம தாக்கொண்டு
நேயருக் கருள்புரிகுவாய்
நிமிர்புன் புலக்கன் மனப்பதக னேன்சதக
நிமலகொண் டாட்கொண்டருள்
தாயே யடைக்கலந் தந்தா யடைக்கலஞ்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

ஒளி — அறிவு

நிராலம்பம் — ஆதாரமற்றது

திரிபுடிநிதி — காண்பவன், காட்சி, காட்சிப்பொருள்
மூன்றுக்கும் ஆதாரமாய் இருப்பவன்

நிகிலம் — எல்லாம் — சர்வமும்

புன்புலம் — எளிய அறிவு — சிற்றறிவு

பதகனேன் — பாவியேன்.

உ

சிவமயம்

# சந்திரமௌலீச போற்றி

தன்கலைகள் பதினைந்து தேய்ந்தமதி தஞ்சமென்று
தன்தலைமேல் உன்பாத மலர்சூடிப் போற்றிசெய்ய
அன்புடனே அதையெடுத்து அஞ்சலென அருள்புரிந்து
அழகாக உன்தலையிற் சூடியருள் இறைவபோற்றி
உன்னடியை அடைந்தமதி அழியாது வளர்ந்துதேய்ந்து
உலவிவருஞ் செயல்காட்டி உன்னடியிற் சரண
டைந்தார்
என்றேனும் அழியாத பெருவாழ்வு பெறுவரென
எல்லோரும் உணரவருள் சந்திரமௌ லீசபோற்றி